**தமிழ்நாடு ஒருங்கிணைந்த பள்ளி கல்வி**

**மாநிலத் திட்ட இயக்குநரின் செயல்முறைகள், சென்னை –600 006.**

**முன்னிலை: திரு.இரா.சுதன் இ.ஆ.ப.,**

**ந.க.எண். ACE/421/ஆ3/CG-7/SS/2022 நாள்: 10.11..2022**

**பொருள்** : ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – கல்வியாண்டு 2022–2023 – 11 மற்றும் 12ம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கான உயர்கல்வி வேலைவாய்ப்பு வழிகாட்டி கையேடு – மாதவாரியாக பாடத்திட்டம் – வழங்குதல் சார்ந்து.

**பார்வை:** :

1. தமிழ்நாடு பள்ளிக்கல்வி ஆணையரின் செயல்முறைகள் ந.க.எண்.:019528/எம்/இ1/2022, நாள். 05.09.2022.
2. இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.ACE/118/ஆ3/ஒபக/ 2022 ,நாள்:24.09.2022
3. பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (தொழிற்கல்வி) செயல்முறைகள் ந.க.எண்.50441/இ/இ3/2021, நாள் 22.07.2022.

************

பார்வை (2) மற்றும் (3)ல் காணும் செயல்முறைகள் வாயிலாக அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கும் உயர்கல்வி வேலைவாய்ப்பு வழிகாட்டி கையேடு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், பார்வை–(1)ல் காணும் பள்ளிக்கல்வி ஆணையரது செயல்முறைகளில், அனைத்து மேல்நிலைப் பள்ளிகளில் 11 மற்றும் 12ம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு வழிகாட்டி கையேட்டில் 07.09.2022 முதல் வகுப்புகள் நடத்துதல் சார்ந்து பாடவேளைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு கீழ்காணுமாறு அனைத்து பள்ளிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

| WEEK/DAY | TIME ALLOTTED | CLASS | GROUP COMIBINATION OF SUBJECTS | GROUP TO COMBINE BASED ON SUBJECT TO BE TRANSACTED |
|---|---|---|---|---|
| இரண்டாம் புதன் கிழமை (2nd Wednesday) | 7th & 8th Period | XI | All Combinations in I & II Groups | VOCATIONAL/AGRI |
| இரண்டாம் வெள்ளிக் கிழமை (3rd Friday) | 7th & 8th Period | XII | All Combinations in I & II Groups | |
| நான்காவது புதன் கிழமை (4th Wednesday) | 7th & 8th Period | XI | All Combinations in III Groups | |
| நான்காவது வெள்ளிக் கிழமை (4th Friday) | 7th & 8th Period | XII | All Combinations in III Groups | |

இதன்படி 11 மற்றும் 12ம் வகுப்பு மாணவர்களுக்கு "நம்மை நாம் புரிந்துக் கொள்ளுதல்" பாடம் அனைத்து மாணவர்களுக்கும் கற்பிக்கப்பட்டுள்ளது. எனவே, தற்போது 2022-23ம் கல்வியாண்டில் நவம்பர் 2022 முதல் பிப்ரவரி 2023 முடிய உயர்கல்வி வேலைவாய்ப்பு வழிகாட்டி கையேட்டில் மாணவர்களுக்கு கற்பிக்கப்பட வேண்டிய பாடங்கள் மற்றும் பாடத்திட்டங்கள் மாதவாரியாக கீழ்காணுமாறும் இணைப்பிலும் வழங்கப்படுகிறது.

| மாதம் | வகுப்பு | பாடங்கள் |
|---|---|---|
| நவம்பர் 2022 | XI | உயர் கல்விப் படிப்புகளை புரிந்துக்கொள்ளுதல் |
| | XII | உயர்கல்விப் படிக்கட்டுகள் |
| டிசம்பர் 2022 | XI | மாணவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டிய திறன்கள் |
| | XII | உயர்கல்விப் படிப்பிற்கான மாற்றுவழிகள் |
| | | வேலை உலகைப் புரிந்துக்கொள்ளுதல் |
| ஜனவரி 2023 | XI | உயர்கல்வியில் சேருவதற்க்கான முன்தயரிப்புகள் |
| | XII | வேலை வாய்ப்புத் தகவல்கள் |
| | XII | வேலை வாய்ப்பை பெறுவதற்காக முன்தயரிப்புகள் |
| பிப்ரவரி 2023 | XI | தேர்வு நேரம் – அச்சம் தவிர் ! வாகை சூடவா! |
| | XII | போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகுதல் |
| | XI | உயர்கல்விப் படிக்கட்டுகள் |
| | XII | நாம் எதிர் கொள்ள கூடிய சவால்கள் |

## பொறுப்புகளும் கடமைகளும்

### அ. தலைமையாசிரியர்கள்:

- அனைத்து பள்ளி தலைமையாசிரியர்களும் மேற்காண் பாடவேளைகள் மற்றும் மாணவர்களுக்கு மாதவாரியாக கற்பிக்கப்பட வேண்டிய பாடங்கள் சார்ந்த விவரங்களை தங்கள் பள்ளிகளில் கையேட்டில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு தவறாமல் உடனடியாக வழங்குதல் வேண்டும்.
- உயர்கல்வி வேலைவாய்ப்பு வழிகாட்டி வகுப்புகள் பள்ளியின் உயர் தொழில்நுட்ப கணினி ஆய்வகத்தில் (HI-TECH LAB) நடத்தப்பட வேண்டும்.
- தொழில்சார் (Vocational) மாணவர்களை பொறியில் படிப்புகள் தொடர்பான வகுப்புகளின் போது 1st குரூப் மாணவர்களுடனும், கலைப் படிப்புகள் தொடர்பான வகுப்புகளின் போது 3rd குரூப் மாணவர்களுடனும் இனணத்து வகுப்புகளை நடத்துதல் வேண்டும்.
- உயர்கல்விக்கான வழிகாட்டுதல்கள் வழங்க பள்ளிக்கு துறைசார் வல்லுநர்களை அழைத்து வந்து, வழங்கப்பட்டுள்ள பாடவேளைகளில் மாணவர்களுடன் உரையாடச் செய்யும் பொறுப்பு சார்ந்த தலைமையாசிரியரையும், பயிற்சி பெற்ற ஆசிரியரையும் சாரும்.
- 11 மற்றும் 12ம் வகுப்புகளுக்கான ஒருங்கிணைந்த நேரலை (Live Streaming) வகுப்புகள் மற்றும் காணொளி இணைப்புகள் ஆகியவற்றை வகுப்பறைக்குள் இணையதள வாயிலாக உயர் தொழில்நுட்ப கணினி ஆய்வகத்தில் காண்பிக்கப்படுவதை தலைமை ஆசிரியர்கள் உறுதி செய்தல் வேண்டும்.
- முதன்மை கருத்தாளர்கள் (DIET பேராசிரியர்கள்), மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் பள்ளிக்கு வந்து இவ்வகுப்புகளை பார்வையிட அனைத்து ஒத்துழைப்பும் தரப்படுதல் வேண்டும்.

- உயர்கல்விக்கான வழிகாட்டுதல்கள் வழங்க பள்ளிக்கு அழைத்துவரப்படும் துறைசார் வல்லுநர்களை வழங்கப்பட்டுள்ள பாட வேளைகளில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் .
- 11 மற்றும் 12ம் வகுப்புகளுக்கான ஒருங்கிணைந்த நேரலை (Live Streaming) வகுப்புகள் நடத்துவதற்கான நாட்கள் மற்றும் பிற விவரங்கள் பின்னர் வழங்கப்படும்.

**ஆ. பயிற்சி பெற்ற ஆசிரியர்கள்:**

- ஒவ்வொரு அத்தியாயத்துக்குமான பாடத்திட்டம் இணைப்பில் வழங்கப்பட்டுள்ளபடி பின்பற்றப்பட வேண்டும்.
- ஒவ்வொரு அத்தியாயம் சார்ந்த வல்லுநர்களின் காணொளி மற்றும் பாடத்திட்டங்கள் நவம்பர் 2022 முதல் "நான் முதல்வன்" Portal மூலம் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும்,
- பயிற்சி பெற்ற ஆசிரியர், தலைமை ஆசிரியர் உதவியுடன் முன்னாள் மாணவர்களை பள்ளிக்கு அழைத்து வந்து உயர்கல்வி சார்ந்த அவர்களின் அனுபவங்களை பகிரச் செய்தல், வழிகாட்டல் வழங்க உறுதுணை புரிதல் போன்ற செயல்பாடுகளை நடைமுறைபடுத்த வேண்டும்.

**இ.முதன்மை கருத்தாளர்கள் (DIET பேராசிரியர்கள்)**

- உயர்கல்வி, வேலைவாய்ப்பு வழிகாட்டி கையேட்டில் பயிற்சி பெற்ற 93 முதன்மை கருத்தாளர்கள் (DIET பேராசிரியர்கள்) வகுப்பறைகளை பார்வையிட்டு, உற்று நோக்கி கையேட்டில் உள்ள விவரங்கள் மாணவர்களுக்கு உரிய முறையில் கற்பிக்கப்படுகின்றனவா என்பதனையும், அதன் மூலம் மாணவர்கள் பயனடைந்துள்ளனரா என்பதனையும் குறித்து கொள்ளுதல் வேண்டும்.
- ஆசிரியர்களுக்கு கையேட்டில் எழும் ஐயங்களை சார்ந்த் பள்ளிகளை பார்வையிட்டு பள்ளியிலேயே நிவர்த்தி செய்தல் வேண்டும்.

ஈ. மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள், மேற்பார்வையாளர்கள் & ஆசிரியர் பயிற்றுநர்கள்

- மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் ஆசிரியர் பயிற்றுநர்கள் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளை பார்வையிட்டு, மேற்கூறியவாறு அனைத்து மாணவர்களுக்கும் மாதவாரிய பாடங்கள் கற்பிக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதி செய்தல் வேண்டும்.

பார்வை-(2)ல் காணும் இவ்வலுவலக செயல்முறையின் வாயிலாக அனைத்து மாவட்ட DIET மற்றும் வட்டார வள மையங்களுக்கும் தலா 5 உயர்கல்வி, வேலைவாய்ப்பு வழிகாட்டி கையேடுகள் வழங்கப்பட்டுள்ளது.

எனவே அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்களும் இச்செயல்முறையினை அனைத்து மேல்நிலைப்பள்ளிகளுக்கும் வழங்கி மேற்கூறப்பட்டுள்ளவாறு உயர்கல்வி வேலைவாய்ப்பு வழிகாட்டி கையேட்டில் வழங்கப்பட்டுள்ள பாடங்களை சார்ந்த பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மூலம் அனைத்து மாணவர்களுக்கு கற்பிக்கவும் அதன் மூலம் மாணவர்கள் பயனடையவும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு: 11 மற்றும் 12ம் வகுப்புகளுக்கான பாடதிட்டம்**

**மாநில திட்ட இயக்குநர்**

9/11/22

**பெறுநர்**

1. அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

**நகல்**

**(முதன்மைக் கல்வி அலுவலர் வழியாக)**

1. பேராசிரியர்கள், மாவட்ட கல்வி மற்றும் ஆசிரியர் பயிற்சி நிறுவனம், அனைத்து மாவட்டங்கள்

2. சார்ந்த தலைமை ஆசிரியர்கள்(அனைத்து மேல்நிலைப் பள்ளிகள்)
3. அனைத்து மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள்
4. வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள், அனைத்து ஒன்றியங்கள்
5. அனைத்து ஆசிரியர் பயிற்றுநர்கள், அனைத்து ஒன்றியங்கள்

**நான் முதல்வன்**
**உயர்கல்வி வேலைவாய்ப்பு வழிகாட்டி**

| வகுப்பு -11 | உயர் கல்விப் படிப்புகளை புரிந்துக்கொள்ளுதல் |
| --- | --- |
| **(மாதம் - நவம்பர் )** | **கால அளவு :** 80 நிமிடங்கள் |

**கற்றலின் வெளிப்பாடு :**
உயர்கல்வி மற்றும் பல்கலைக்கழகங்கள் பற்றிய அறிவை மாணவர்களிடம் வளர்த்தல். தமிழகத்தில் உள்ள பல்கலைக்கழகங்களைப் பற்றி அறிந்துகொள்ளச் செய்தல்.தான் விரும்பும் உயர்கல்வி எது என்பது பற்றி முடிவு எடுக்கக் கற்றுக்கொடுத்தல்.அந்தப் படிப்பை வழங்கும் கல்லூரிகள், எந்தப் பாடப்பிரிவைத் தேர்ந்தெடுப்பது, அந்தப் படிப்பிற்கு
தேவைப்படும் திறன்கள் மற்றும் தேவைப்படும் தகுதி போன்றவை பற்றிச் சிந்திக்கச் செய்தல்.மாணவர்கள் தங்கள் மாவட்டத்தில் உள்ள கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் பற்றி அறியச் செய்தல்.மாணவர்கள் தான் படித்துக் கொண்டிருக்கும் பாடப்பிரிவில் இருந்து அவர்களுடைய கனவான வேலையை அடைவதற்கு என்ன என்ன உயர்கல்வி படிநிலைகளைக் கடக்க வேண்டும் என்ற பாதையை உருவாக்கக் கற்றுக்கொடுத்தல். மாணவர்களிடையே உயர்கல்விப் படிப்புகளில் உள்ள பிரிவுகளைத் தேடித் தெரிந்துகொள்ளும் ஆர்வத்தை உருவாக்கும். இந்த உயர்கல்வி, வேலைவாய்ப்பு வழிகாட்டியில் கொடுக்கப்பட்டுள்ள கல்வி உதவித்தொகை வழங்கும் இணையதளங்களைப் பயன்படுத்தித் தகவல்களைச் சேகரிக்கப் பழகுதல்.

| செயல்பாடுகள் : | | | | | |
|---|---|---|---|---|---|
| வீடியோ / வழிகாட்டுதல் (Video / Mentoring) | | முக்கிய செயல்பாடுகள் (Core Activity) | | இணைய முகப்பு (Portal) | |
| செயல்பாடுகள் | Resource Person | செயல்பாடுகள் | Source / Resource | செயல்பாடுகள் | Resource |
| • Paramedical and allied medicine **(Bio Maths - 1 Hr 40 Mins)**<br>• Hardware and software job difference, Softwares to note, learning responsibility **(Com Science - 3 Mins 30 Secs)**<br>• 3rd Group, is it bad? How important is commerce.? **(Commerce - 5 Mins )** | 1. Dr. Madan (Bio-maths)<br>2. Mr. Suresh (Com.Science)<br>3. Ms. Subashini (Commerce) and Mr. Joe Arun(Commerce) | • **சிறகடித்துப் பறக்கலாம்!**<br>• **தேடல் !**<br>• **அடுத்த நிறுத்தம் : உயர்கல்வி!** | **Book** | | **https://naanmudhalvan.tnschools.gov.in/** |

**கற்றலின் பிரதிபலிப்பு**

உயர் கல்விப் படிப்புகளை புரிந்துக்கொள்ளுதல் என்னும் பாடப் பகுதியில் மாணவர்கள் தங்கள் அறிந்துக் கொண்ட கற்றல் அனுபவத்தை எழுதுமாறு கூறுங்கள் .இங்கு கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளின் அடிப்படையில் அவர்கள் கருத்தினை கேட்கப்பட வேண்டும் .

1. உயர்கல்வியில் என்ன படிக்கலாம் என்பது பற்றி தெரிந்துக் கொண்டீர்களா ?
2. நுழைவுத் தேர்வு தொடர்பான விவரங்களை அறிந்து கொண்டீர்களா ?
3. உங்களுடைய விருப்பத்துக்கும் ,திறனுக்கும் ஏற்ற படிப்பை எவ்வாறு தேர்வு செய்வது என்பதை அறிந்துக் கொண்டீர்களா ?

| வகுப்பு -11 | மாணவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டிய திறன்கள் |
|---|---|
| **மாதம் - டிசம்பர்** | **கால அளவு :** 80 நிமிடங்கள் |

**கற்றலின் வெளிப்பாடு :**

கற்றல் திறனை மேம்படுத்திக் கொள்வது பற்றி அறிந்து கொள்வார்கள். மாணவர்கள், உறவுகளைப் பற்றி புரிந்துகொள்வார்கள். வாழ்க்கைக்கு திறன்கள் , நற்பண்புகளும் இரண்டுமே அவசியம் என்பதைத் தெரிந்து கொள்வார்கள்.

| **செயல்பாடுகள் :** | | | | | |
|---|---|---|---|---|---|
| **வீடியோ / வழிகாட்டுதல் (Video / Mentoring)** | | **முக்கிய செயல்பாடுகள் (Core Activity)** | | **இணைய முகப்பு (Portal)** | |
| **செயல்பாடுகள்** | **Resource** | **செயல்பாடுகள்** | **Resource** | **செயல்பாடுகள்** | **Resource** |
| • Unlearning, Relearning and Repeated trying - opportunities available all around,Learning responsibility.<br>**( 5 Mins )**<br>• Difference between studying and skill development parallelly<br>**( Com Sci - 5 Mins )** | **Dr.Madan**<br>**Mr.Mac app**<br>**Suresh**<br>**Mr.Ilambahavath** | • **எவை திறன்கள் ! எவை பண்புகள்!**<br>• **உறவுகளைப் புரிந்துக் கொள்ளுதல்!** | **Book** | | **https://naanmudhalvan.tnschools.gov.in/** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| • What else can a student do in college? Creating passion and skills for development **(1 min 35 secs)** | | | | | |

**கற்றலின் பிரதிபலிப்பு**

மாணவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டிய திறன்கள் என்னும் பாடப் பகுதியில் மாணவர்கள் தங்கள் அறிந்துக் கொண்ட கற்றல் அனுபவத்தை எழுதுமாறு கூறுங்கள் .இங்கு கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளின் அடிப்படையில் அவர்கள் கருத்தினை கேட்கப்பட வேண்டும் .

1. கற்றல் திறன்களை வளர்த்துக் கொள்வதன் அவசியத்தை அறிந்தீர்களா ?
2. உங்களுடைய திறன்கள் மற்றும் பண்புகள் யாவை என்பதை அறிந்துக் கொண்டீர்களா ?

| வகுப்பு -11 | உயர்கல்வியில் சேருவதற்க்கான முன்தயாரிப்புகள் |
|---|---|
| **மாதம் - ஜனவரி 2023** | **கால அளவு :** 80 நிமிடங்கள் |

**கற்றலின் வெளிப்பாடு :**

மாணவர்களிடையே செய்தித்தாள் வாசிக்கும் பழக்கத்தை உண்டாக்கி அதன் மூலம் அவர்களது மொழித்திறன், எழுதும் திறன், உரையாடும் திறன், பிறரிடம் பகிர்ந்து கொள்ளும் திறன் மற்றும் கவனித்தல் திறன் போன்றவற்றை வளர்க்கச் செய்தல்.
மாணவர்கள் தங்கள் பகுதியில் / ஊரில் உள்ள நிறுவனங்கள் பற்றி தெரிந்துக் கொள்ள செய்தல். மேலும் அந்த நிறுவனத்தின் வேலை வாய்ப்பிற்கான கல்வி தகுதி, பணி விவரம் பற்றிய தகவல்களை அறிய செய்தல்.அறிமுகம் இல்லாதவர்களிடம் பேசவும் கலந்து பழகவும் பேசுவதை உற்றுக்கவனிக்கவும் உரையாடி கருத்துகளைப் பெறவும் அதைத் தொகுத்து எழுதவும் அறிந்து கொள்ளுதல்.

| செயல்பாடுகள் : | | | | | |
|---|---|---|---|---|---|
| வீடியோ / வழிகாட்டுதல் (Video / Mentoring) | | முக்கிய செயல்பாடுகள் (Core Activity) | | இணைய முகப்பு (Portal) | |
| செயல்பாடுகள் | Resource | செயல்பாடுகள் | Resource | செயல்பாடுகள் | Resource |
| • How to develop communication skills<br>• How to overcome Language barriers?<br>• How to prepare a self profile ?<br>• How to surf Internet for nearby courses/ scholarships/ Colleges | • Ms.Deepalakshmi<br>• Rajarajan | • சிறிய தகவல் ! பெரிய மற்றம்!<br>• ஊர் சுற்றலாமா! | Book | | https://naanmudhalvan.tnschools.gov.in/ |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| etc., | | | | | |

**கற்றலின் பிரதிபலிப்பு**

உயர்கல்வியில் சேருவதற்க்கான முன்தயாரிப்புகள் என்னும் பாடப் பகுதியில் மாணவர்கள் தங்கள் அறிந்துக் கொண்ட கற்றல் அனுபவத்தை எழுதுமாறு கூறுங்கள் .இங்கு கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளின் அடிப்படையில் அவர்கள் கருத்தினை கேட்கப்பட வேண்டும் .

1. பள்ளியிலிருந்து உயர்கல்விக்கு போவதற்கு முன் நாம் கையில் இருக்க வேண்டிய சான்றிதழ்கள் என்னென்ன ?
2. உயர்கல்விப் படிப்பைத் தேர்ந்தெடுப்பதற்கு முன் , நாம் தெரிந்துக் கொள்ள வேண்டிய தகவல்கள் என்னென்ன ?

| **வகுப்பு - 11** | **அச்சம் தவிர் !** |
|---|---|
| **மாதம் - பிப்ரவரி 2023** | **கால அளவு :** 80 நிமிடங்கள் |

**கற்றலின் வெளிப்பாடு :**

**தேர்வுகளை எவ்வாறு எதிர்கொள்வது என்பது குறித்த புரிதல் இல்லாத நேரத்தில் அதைக் கண்டு பயம் வருவது இயல்பான ஒன்றுதான். அதைச் சிறு மாற்றங்கள்/புரிதல்கள் கொண்டு எளிதில் கடக்கலாம் என்ற எண்ணத்தை விதைத்தல்.**

| செயல்பாடுகள் : | | | | | |
|---|---|---|---|---|---|
| வீடியோ / வழிகாட்டுதல் (Video / Mentoring) | | முக்கிய செயல்பாடுகள் (Core Activity) | | இணைய முகப்பு (Portal) | |
| செயல்பாடுகள் | Resource | செயல்பாடுகள் | Resource | செயல்பாடுகள் | Resource |
| • உணர்வுகள், - முயற்சிகள், தேர்வுநேர பதட்டம் | Aarthy<br>Villavan Ramadas<br>Femil | • உணர்வுகள்<br>• முயற்சிகள்<br>• தேர்வு நேர பதட்டம் | Book - lecture Mode | | https://naanmudhalvan.tnschools.gov.in/ |

**கற்றலின் பிரதிபலிப்பு**

தேர்வு நேரம் - அச்சம் தவிர் ! வாகை சூடவா! என்னும் பாடப் பகுதியில் மாணவர்கள் தங்கள் அறிந்துக் கொண்ட கற்றல் அனுபவத்தை எழுதுமாறு கூறுங்கள் .இங்கு கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளின் அடிப்படையில் அவர்கள் கருத்தினை கேட்கப்பட வேண்டும் .

1. தேர்வைக் கண்டு பயப்படாமல் , எந்த பதற்றமும் இல்லாமல் தேர்வை அணுகுவது எப்படி என்பதை தெரிந்து கொண்டீர்களா ?
2. தேர்வு அறையில் எப்படி நடந்துக் கொள்ள வேண்டும் என்பதை அறிந்துக் கொண்டீர்களா ?

| வகுப்பு - 11 | |
|---|---|
| **உயர்கல்விப் படிக்கட்டுகள்** | |
| **மாதம் - பிப்ரவரி 2023** | **கால அளவு :** 80 நிமிடங்கள் |
| **கற்றலின் வெளிப்பாடு :**<br>**முதுநிலைப் படிப்பிற்கான நுழைவுத்தேர்வுகளைப் பற்றிய சிந்தனையைப் பெற்றிருத்தல்.** | |

| **செயல்பாடுகள் :** | | | | | |
|---|---|---|---|---|---|
| **வீடியோ / வழிகாட்டுதல் (Video / Mentoring)** | | **முக்கிய செயல்பாடுகள் (Core Activity)** | | **இணைய முகப்பு (Portal)** | |
| **செயல்பாடுகள்** | **Resource** | **செயல்பாடுகள்** | **Resource** | **செயல்பாடுகள்** | **Resource** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| • **நுழைவுத் தேர்வுக்குள் நுழையலாம்!**<br>• **Learn about finding the courses information**<br>• **Learning about application process**<br>• **Learning about choosing** | • **videos need to be prepared by Rajarajan** | • **நுழைவுத் தேர்வுக்குள் நுழையலாம்!** | **Book - lecture Mode** | | **https://naanmudhalvan.tnschools.gov.in/** |

**கற்றலின் பிரதிபலிப்பு**

உயர்கல்விப் படிக்கட்டுகள் என்னும் பாடப் பகுதியில் மாணவர்கள் தங்கள் அறிந்துக் கொண்ட கற்றல் அனுபவத்தை எழுதுமாறு கூறுங்கள் .இங்கு கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளின் அடிப்படையில் அவர்கள் கருத்தினை கேட்கப்பட வேண்டும் .

1. முதுநிலைப் படிப்புகளில் சேருவதற்கான நுழைவுத் தேர்வுகள் என்னென்ன என்பதை தெரிந்துக் கொண்டீர்களா ?

**நான் முதல்வன்**
**உயர்கல்வி வேலைவாய்ப்பு வழிகாட்டி**

| **வகுப்பு - 12**<br>**உயர்கல்விப் படிக்கட்டுகள்** | |
|---|---|
| **மாதம் - நவம்பர்** | **கால அளவு :** 80 நிமிடங்கள் |
| **கற்றலின் வெளிப்பாடு :**<br>**முதுநிலைப் படிப்பிற்கான நுழைவுத்தேர்வுகளைப் பற்றிய சிந்தனையைப் பெற்றிருத்தல்.** | |

| **செயல்பாடுகள் :** | | | | | |
|---|---|---|---|---|---|
| **வீடியோ / வழிகாட்டுதல் (Video / Mentoring)** | | **முக்கிய செயல்பாடுகள் (Core Activity)** | | **இணைய முகப்பு (Portal)** | |
| **செயல்பாடுகள்** | **Resource** | **செயல்பாடுகள்** | **Resource** | **செயல்பாடுகள்** | **Resource** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| • **நுழைவுத் தேர்வுக்குள் நுழையலாம்!**<br>• **Learn about finding the courses information**<br>• **Learning about application process**<br>• **Learning about choosing** | • **videos need to be prepared by Rajarajan** | • **நுழைவுத் தேர்வுக்குள் நுழையலாம்!** | **Book - lecture Mode** | | **https://naanmudhalvan.tnschools.gov.in/** |

**கற்றலின் பிரதிபலிப்பு**

உயர்கல்விப் படிக்கட்டுகள் என்னும் பாடப் பகுதியில் மாணவர்கள் தங்கள் அறிந்துக் கொண்ட கற்றல் அனுபவத்தை எழுதுமாறு கூறுங்கள் .இங்கு கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளின் அடிப்படையில் அவர்கள் கருத்தினை கேட்கப்பட வேண்டும் .

1. முதுநிலைப் படிப்புகளில் சேருவதற்கான நுழைவுத் தேர்வுகள் என்னென்ன என்பதை தெரிந்துக் கொண்டீர்களா ?

| வகுப்பு -12 | உயர்கல்விப் படிப்பிற்கான மாற்றுவழிகள் |
|---|---|
| **மாதம் - டிசம்பர்** | **கால அளவு :** 80 நிமிடங்கள் |

**கற்றலின் வெளிப்பாடு :**

மாணவர்கள் மாற்று வழி கல்வியான தொலைநிலைக் கல்வி, பற்றி தெரிந்து கொள்வார்கள்.

மாற்றுவழி கல்வியான ஐ.டி.ஐ. பற்றி மாணவர்கள் தெரிந்து கொள்ளுதல்.மாணவர்கள் பதினோராம் வகுப்பில் தொடங்கி பன்னிரண்டாம் வகுப்பு இறுதியில் அவர்களின் படிப்பின் ஆர்வம் என்ன என்பதைக் கண்டறிய உதவுதல். மேலும் பன்னிரண்டாம் வகுப்பு இறுதியில் அவர்களுக்கு உண்டாகும் தயக்கங்கள்/ பயங்கள் பற்றி அறிந்து அவற்றைக் களையக் கற்றுத்தருதல்.

**செயல்பாடுகள் :**

| வீடியோ / வழிகாட்டுதல் (Video / Mentoring) | | முக்கிய செயல்பாடுகள் (Core Activity) | | இணைய முகப்பு (Portal) | |
|---|---|---|---|---|---|
| **செயல்பாடுகள்** | **Resource** | **செயல்பாடுகள்** | **Resource** | **செயல்பாடுகள்** | **Resource** |
| • **வட்டத்திற்குள் நிக்கலாம் வங்க!** | • **Videos to be prepared by Rajarajan** | • கல்வி என்றுமே தூரம் இல்லை | | | **https://naanmudhalvan.tnschools.gov.in/** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |

**கற்றலின் பிரதிபலிப்பு**

உயர்கல்விப் படிப்பிற்கான மாற்றுவழிகள் என்னும் பாடப் பகுதியில் மாணவர்கள் தங்கள் அறிந்துக் கொண்ட கற்றல் அனுபவத்தை எழுதுமாறு கூறுங்கள் .இங்கு கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளின் அடிப்படையில் அவர்கள் கருத்தினை கேட்கப்பட வேண்டும் .

1. தொலை நிலைக் கல்வி என்றால் என்ன ? அவற்றிற்கு எவ்வாறு விண்ணப்பிப்பது ?

**வகுப்பு -12** **வேலை உலகைப் புரிந்துக்கொள்ளுதல்**

| **மாதம் - டிசம்பர்** | **கால அளவு :** 80 நிமிடங்கள் |
|---|---|

**கற்றலின் வெளிப்பாடு :**

**ஒரு வேலைவாய்ப்பை எப்படித் தேடுவது, வேலை நிறுவனங்களை எப்படித் தொடர்புகொள்வது மற்றும் ஒரு மாதிரி நிறுவன நேர்காணல் எப்படி நடைபெறும் என்பது பற்றி மாணவர்கள் தெரிந்துகொள்ளச் செய்தல்.தன்னுடைய கனவுப் வேலை குறித்து சிந்திக்கத் தூண்டுதல்.ஒரு வேலையைத் தேர்வு செய்யும்போது ஊதியம், வளர்ச்சி, சமூகத்தில் மரியாதை ஆகியவற்றை அடைவதற்கான வழியாக மட்டும் பார்க்காமல், சமூகத்திற்கு உதவும் அறம் சார்ந்த பண்புகளையும் பயன்படுத்த வேண்டும் என்று உணர்தல்.மாணவர்களை தங்களுக்கு விருப்பமான வேலை எது என்பதை சிந்திக்க வைத்தல் மற்றும் அந்த வேலைக்கு தேவையான உயர்கல்வி படிப்பு பற்றிய தகவல்களை அறியச் செய்தல்.**

| செயல்பாடுகள் : | | | | | |
|---|---|---|---|---|---|
| வீடியோ / வழிகாட்டுதல் (Video / Mentoring) | | முக்கிய செயல்பாடுகள் (Core Activity) | | இணைய முகப்பு (Portal) | |
| **செயல்பாடுகள்** | **Resource** | **செயல்பாடுகள்** | **Resource** | **செயல்பாடுகள்** | **Resource** |
| • What can a student do after studying economics/Commerce **( 7 Mins )**<br>• Private sector or Government sector **(2 mins 30 secs)** | Mr.Joe Arun<br>Mr.Ilambahavath | • **வேலை உலகம்!**<br>• **என் கனவு வேலை!**<br>• **வேலையில் அறம்!**<br>• **இது தெளிவடையும் நேரம்!** | **Book - lecture Mode** | | **https://naanmudhalvan.tnschools.gov.in/** |

**கற்றலின் பிரதிபலிப்பு**

வேலை உலகைப் புரிந்துக்கொள்ளுதல் என்னும் பாடப் பகுதியில் மாணவர்கள் தங்கள் அறிந்துக் கொண்ட கற்றல் அனுபவத்தை எழுதுமாறு கூறுங்கள் .இங்கு கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளின் அடிப்படையில் அவர்கள் கருத்தினை கேட்கப்பட வேண்டும் .

1.வேலையை எவ்வாறு தேடுவது ?

2.வேலை நிறுவனங்களை எப்படித் தொடர்புக் கொள்வது ?

| வகுப்பு - 12 | வேலை வாய்ப்புத் தகவல்கள் |
|---|---|
| மாதம் - ஜனவரி 2023 | கால அளவு : 80 நிமிடங்கள் |

**கற்றலின் வெளிப்பாடு :**

வேலைவாய்ப்பு குறித்த விழிப்புணர்ச்சி பெறுதல் .வேலைவாய்ப்பு தொடர்பான தகவல்களைச் சேகரித்தல்.வேலைவாய்ப்புத் தகவல்களை மதிப்பீடு செய்தல்.

| செயல்பாடுகள் : | | | | | |
|---|---|---|---|---|---|
| வீடியோ / வழிகாட்டுதல் (Video / Mentoring) | | முக்கிய செயல்பாடுகள் (Core Activity) | | இணைய முகப்பு (Portal) | |
| செயல்பாடுகள் | Resource | செயல்பாடுகள் | Resource | செயல்பாடுகள் | Resource |
| • Exposure visits to Colleges | • videos shared by Rajarajan and Kalaimani | • வேலை வாய்ப்புத் தகவல்கள் | Book - lecture Mode | | https://naanmudhalvan.tnschools.gov.in/ |

| **கற்றலின் பிரதிபலிப்பு** |
|---|
| வேலை வாய்ப்புத் தகவல்கள் என்னும் பாடப் பகுதியில் மாணவர்கள் தங்கள் அறிந்துக் கொண்ட கற்றல் அனுபவத்தை எழுதுமாறு கூறுங்கள் .இங்கு கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளின் அடிப்படையில் அவர்கள் கருத்தினை கேட்கப்பட வேண்டும் .<br><br>1.வேலை வாய்ப்புத் தகவல்களை எங்கே பெறலாம் ?<br>2.இணையதளம் மூலம் வேலைவாய்ப்புத் தகவலை எவ்வாறு பெறுவது என்பதை அறிந்துக் கொண்டீர்களா ? |

| **வகுப்பு -12** | **வேலை வாய்ப்பை பெறுவதற்காக முன்தயரிப்புகள்** |
|---|---|
| **மாதம் - ஜனவரி 2023** | **கால அளவு :** 80 நிமிடங்கள் |
| **கற்றலின் வெளிப்பாடு :**<br>**மாணவர்கள் தங்களுக்குள் ஒளிந்திருக்கும் தனித்திறமையை அடையாளம் காண ஆரம்பித்தல்.வளாக நேர்காணல் எப்படி நடக்கும் என்பதை மாணவர்கள் புரிந்துகொள்ளுதல்.** | |

| **செயல்பாடுகள் :** | | |
|---|---|---|
| **வீடியோ / வழிகாட்டுதல் (Video / Mentoring)** | **முக்கிய செயல்பாடுகள் (Core Activity)** | **இணைய முகப்பு (Portal)** |

| செயல்பாடுகள் | Resource | செயல்பாடுகள் | Resource | செயல்பாடுகள் | Resource |
|---|---|---|---|---|---|
| • **video on Campus interview, Interview skills, Communication in English, CV writings, written test, Group discussion, how to find job option from search engines, orientation on job ethics** | • **RP Ms.Deepalakshmi** | • **உன் திறமை உன் கையில் !** | Book - lecture Mode | | **https://naanmudhalvan.tnschools.gov.in/** |

**கற்றலின் பிரதிபலிப்பு**

வேலை வாய்ப்பை பெறுவதற்காக முன்தயரிப்புகள்  என்னும் பாடப் பகுதியில் மாணவர்கள் தங்கள்  அறிந்துக் கொண்ட கற்றல் அனுபவத்தை எழுதுமாறு கூறுங்கள் .இங்கு கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளின் அடிப்படையில் அவர்கள் கருத்தினை கேட்கப்பட வேண்டும் .

1. உங்களுக்குள்  ஒளிந்திருக்கும் தனித்திறமையை அடையாளம் காண முடிந்ததா ?.
2. வளாக நேர்காணல் எப்படி நடக்கும் என்பதனை அறிந்துக் கொண்டீர்களா ?

| **வகுப்பு - 12** | **போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகுதல்** |
|---|---|
| **மாதம் - பிப்ரவரி 2023** | **கால அளவு :** 80 நிமிடங்கள் |

**கற்றலின் வெளிப்பாடு :**

**வேலைவாய்ப்புகளுக்குரிய போட்டித் தேர்வுகளைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும் . போட்டித் தேர்வுகளுக்கு எப்படித் தயாராக வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும் .**

**செயல்பாடுகள் :**

| **வீடியோ / வழிகாட்டுதல் (Video / Mentoring)** | | **முக்கிய செயல்பாடுகள் (Core Activity)** | | **இணைய முகப்பு (Portal)** | |
|---|---|---|---|---|---|
| **செயல்பாடுகள்** | **Resource** | **செயல்பாடுகள்** | **Resource** | **செயல்பாடுகள்** | **Resource** |
| • **Bank Exam** (3 mins 30 secs ) <br> • can prepare for competitive exams when in job **( 1 MIn 40 Sec )** <br> • TNPSC **( 4 Mins )** <br> • How do approach UPSC **( 1 Min 18 Sec )** <br> • **UPSC exam Overview** | Mr. Illambagavath | • போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகுதல் | Book - lecture Mode | | **https://naanmudhalvan.tnschools.gov.in/** |

| ( 5 Mins 30 Sec ) | | | | | |
|---|---|---|---|---|---|

**கற்றலின் பிரதிபலிப்பு**

போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகுதல் என்னும் பாடப் பகுதியில் மாணவர்கள் தங்கள் அறிந்துக் கொண்ட கற்றல் அனுபவத்தை எழுதுமாறு கூறுங்கள் .இங்கு கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளின் அடிப்படையில் அவர்கள் கருத்தினை கேட்கப்பட வேண்டும் .

1. போட்டித் தேர்வுகளின் முக்கியத்துவம் என்ன ?
2. போட்டித் தேர்வுகளுக்கு எப்படி தயாராக வேண்டும் ?

| **வகுப்பு -12** | **நாம் எதிர் கொள்ள கூடிய சவால்கள்** |
|---|---|
| **மாதம் - பிப்ரவரி 2023** | **கால அளவு :** 80 நிமிடங்கள் |

**கற்றலின் வெளிப்பாடு :**

**வாழ்க்கை பல்வேறு சவால்கள் நிறைந்தது. இதை முன்கூட்டியே தெரிந்து கொள்வதன் மூலம்தான் அவற்றை எதிர்கொள்ள முடியும் என்று மாணவர்களுக்கு உணர்த்துதல். உயர்கல்வி, வேலைவாய்ப்பை ஒட்டி நாம் பல்வேறு சவால்களை எதிர்கொள்ள நேரிடும். அவை என்னவென்று தெரிந்தால், அவற்றைக் கையாள்வது பற்றி யோசிப்போம். இவற்றில் சில சவால்கள் அக ரீதியானவை. (நம் எண்ணம், நம் மதிப்பீடு) சில புற ரீதியானவை.**

**செயல்பாடுகள் :**

| வீடியோ / வழிகாட்டுதல் (Video / Mentoring) | | முக்கிய செயல்பாடுகள் (Core Activity) | | இணைய முகப்பு (Portal) | |
|---|---|---|---|---|---|
| **செயல்பாடுகள்** | **Resource** | **செயல்பாடுகள்** | **Resource** | **செயல்பாடுகள்** | **Resource** |
| • **Higher Education related challenges,our thinking,our Evaluation** | **Ms.Deepalakshmi** | • **மீண்டு எழுவேன்!** | Book - lecture Mode | | **https://naanmudhalvan.tnschools.gov.in/** |

**கற்றலின் பிரதிபலிப்பு**

நாம் எதிர் கொள்ள கூடிய சவால்கள் என்னும் பாடப் பகுதியில் மாணவர்கள் தங்கள் அறிந்துக் கொண்ட கற்றல் அனுபவத்தை எழுதுமாறு கூறுங்கள் .இங்கு கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளின் அடிப்படையில் அவர்கள் கருத்தினை கேட்கப்பட வேண்டும் .

1. சவால்களை எவ்வாறு எதிர்க் கொள்வது ?